# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய அரசியலமைப்பு**

**பகுதி : ஒன்றிய (அ) மத்திய நீதித்துறை**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

## ஒன்றிய (அ) மத்திய நீதித்துறை - SUPREME COURT (ART-124-147)

### ART-124

- உச்சநீதிமன்றம் இருக்க வேண்டும் என குறிப்பிடுகிறது.
- 1935 இந்திய அரசு சட்டப்படி கூட்டாட்சி நீதிமன்றமாக செயல்பட்டது.
- 28.1.1950-ல் இந்திய உச்சநீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது.
- ஆரம்பத்தில் (28.1.1950) ஒரு தலைமை நீதிபதி + 7 நீதிபதிகள் என மொத்தம் 8 நீதிபதிகள் இருந்தனர்
- 1956-ல் நீதிபதிகளின் எண்ணிக்கை = 1+10=**11** ஆகவும், 1960-ல் நீதிபதிகளின் எண்ணிக்கை = 1+13=**14** ஆகவும், 1977-ல் நீதிபதிகளின் எண்ணிக்கை = 1+17=**18** ஆகவும், 1986-ல் 1+25=**26** ஆகவும் உயர்த்தப்பட்டது.
- 2009 - FEB- ல் தற்போதைய எண்ணிக்கையான 1 தலைமை நீதிபதி + 30 நீதிபதிகள் = 31 நீதிபதியாக உயர்த்தப்பட்டது.
- உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை தீர்மானிப்பது = நாடாளுமன்றம்
- உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை தீர்மானிப்பவர் = குடியரசுதலைவர்

**நீதிபதிகள் நியமனம்**

- தலைமை நீதிபதியை நியமிப்பவர் = குடியரசு தலைவர்
- மற்ற நீதிபதிகளை (30) தலைமை நீதிபதி (ம) 3 (அ) 4 நீதிபதிகள் கொண்ட கொலிஜியத்தின் பரிந்துரைப்படி குடியரசுதலைவர் நியமிப்பார்
- 2014 - 99 வது சட்டதிருத்தப்படி தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்தின் பரிந்துரைப்படி நியமிக்க வகை செய்யபட்டது, 99-வது சட்டதிருத்தம் 13-4-2015-ல் நடைமுறைக்கு வந்தது.
- 16-10-2015-ல் உச்சநீதிமன்றம், தேசியநீதிபதிகள் நியமன ஆணையச்சட்டம் செல்லாது என அறிவித்தது.

**நீதிபதிகளுக்கான தகுதிகள்**

- ஒன்று (அ) ஒன்றுக்கும் மேற்பட்ட உயர்நீதிமன்றங்களில் தொடர்ந்து 5 ஆண்டுகள் நீதிபதியாக பணியாற்றிருக்க வேண்டும் (அ) உயர்நீதிமன்ற வழக்கறிஞராக 10 ஆண்டுகள் பதவி வகித்திருக்க வேண்டும்.
- குடியரசுதலைவர் கருத்துப்படி சிறந்த சட்டவல்லுனராக இருக்க வேண்டும்.

**<u>பதவிப்பிரமானம்</u>**

- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி (ம) மற்ற நீதிபதிகளுக்கு பதவிப்பிரமானம் செய்து வைப்பவர் = குடியரசுத்தலைவர்
- பதவிக்காலம் = 65 வயது வரை
- பதவிவிலகல் கடிதத்தை குடியரசுத் தலைவரிடம் அளிக்க வேண்டும்.
- ஓய்வுக்குப்பின் இந்தியாவில் எந்த நீதிமன்றத்திலும் வாதாடக்கூடாது, அரசு அனுமதியின்றி எந்த பதவியும் வகிக்கக் கூடாது.

**<u>பதவிநீக்கம் - IMPEACHMENT</u>**

- தலைமை நீதிபதி (ம) மற்ற நீதிபதிகளை தவறான நடத்தை (அ) தகுதியின்மை ஆகிய காரணங்களுக்காக நாடாளுமன்றத்தில் 2/3 பங்கு சிறப்பு பெரும்பான்மை தீர்மானம் மூலம் பதவி நீக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் குடியரசுத்தலைவர் குற்றம் சாட்டப்பட்ட நீதிபதியை பதவிநீக்கம் செய்வார்.

**ART-125**

- உச்சநீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம், படிகள், சலுகைகள் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-126**

- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவி காலியாகும் இருக்கும்போது குடியரசுத்தலைவர் உச்சநீதிமன்ற மூத்த நீதிபதி ஒருவரை தற்காலிக தலைமை நீதிபதியாக நியமிப்பது பற்றி குறிப்பிடுகிறது.

**ART-127**

- உச்சநீதிமன்ற மற்ற நீதிபதிகளின் பதவி காலியாக இருக்கும்போது குடியரசுத்தலைவர் ஒப்புதலுடன், தலைமை நீதிபதி - உயர்நீதிமன்ற நீதிபதிகளை தற்காலிக (அ) தனிநீதிபதிகளாக நியமிப்பது பற்றி குறிப்பிடுகிறது.

**ART-128**

- உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகளை (2 ஆண்டுகளுக்கு மிகாமல்) தற்காலிக நீதிபதிகளாக நியமிப்பது பற்றி குறிப்பிடுகிறது.

**ART-129**

- ஒரு ஆவணமன்ற நீதி அதிகாரம் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-130**

- உச்சநீதிமன்றத்தின் அமைவிடம் பற்றி குறிப்பிடுகிறது.

➔ குடியரசுதலைவர் ஒப்புதலுடன், தலைமை நீதிபதி உச்சநீதிமன்றத்தின் அமைவிடம் (அ) கிளையை இந்தியாவின் எந்த இடத்திலும் (அ) எந்த மாநிலத்திலும் ஏற்படுத்தலாம். (உச்சநீதிமன்றத்தின் கிளை இந்தியாவில் இல்லை).

**ART-137**

➔ உச்சநீதிமன்றம் தான் வழங்கிய தீர்ப்புகள் (அ) ஆணைகளை மறு ஆய்வு (அ) மறுசீராய்வு செய்வது பற்றி குறிப்பிடுகிறது.

**ART-138**

➔ உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்பை பாராளுமன்றம் நீட்டிக்கலாம் (அ) அதிகரிக்கலாம் என குறிப்பிடுகிறது. (ஆனால் குறைக்க இயலாது)

**ART-141**

➔ உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள் (அ) ஆணைகள், அறிவிப்புகள் நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றத்தையும் கட்டுப்படுத்தும் என குறிப்பிடுகின்றது.

**ART-145**

➔ உச்சநீதிமன்றம் தனக்குத்தானே விதிமுறைகளையும் ஒழுங்குமுறை விதிகளையும் ஏற்படுத்திக்கொள்வது பற்றி குறிப்பிடுகிறது.

## உச்சநீதிமன்றத்தின் அதிகாரங்கள்

### முதல் வரம்பு நீதி அதிகாரம் - ORIGINAL JURISDICTION

➔ தனக்கே உள்ள நீதி அதிகாரம்

➔ மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான வழக்குகள், மாநிலங்களுக்கிடையேயான வழக்குகள் ஆகியவற்றில் இவ்வதிகாரத்தை பயன்படுத்தி தீர்வு வழங்குகிறது.

➔ 1961-ல் மேற்கு வங்காள அரசுக்கும் - மத்திய அரசுக்கும் இடையேயான வழக்கில் முதன்முதலில் இவ்வதிகாரத்தை பயன்படுத்தியது.

### மேல் முறையீட்டு நீதி அதிகாரம் - APPELLATE JURISDICTION

➔ உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் (ம) தீர்ப்பாயங்களில் வழங்கப்பட்ட (ராணுவ தீர்ப்பாயம் தவிர) மேல் முறையீடுகளை விசாரிக்கிறது.

➔ 4 வகையான மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கிறது.

1. ART-132-ன்படி அரசியலமைப்பு தொடர்பான வழக்குகள்
2. ART-133-ன்படி சிவில் (அ) உரிமையியல் தொடர்பான வழக்குகள்
3. ART-134-ன்படி குற்றவியல் தொடர்பான வழக்குகள்
4. ART-136-ன்படி சிறப்பு அனுமதி வழக்குகள்

✓ ART-134(A)-ன்படி, வழக்குகளை தீர்க்க அரசியலமைப்பு சட்டப்படி மேலும் விளக்கம் தேவை என உயர்நீதிமன்றம் சான்று அளித்தால் மட்டுமே மேல்முறையீடு செய்ய இயலும்.

## நீதிப்பேராணை நீதி அதிகாரம் - WRIT JURISDICTION

- ✓ **ART-32**-ன்படி 5 வகையான ரிட் உரிமைகள் (அ) நீதிப்பேராணைகளை பெற்று குடிமக்களின் அடிப்படை உரிமை பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குகிறது.

## ஆலோசனை நீதி அதிகாரம் - ADVISORY JURISDICTION

- **ART-143**-ன்படி குடியரசுத்தலைவர் உச்சநீதிமன்றத்திடம் 2 வகையான ஆலோசனைகளை கூறலாம்.

1. பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள் (அ) சட்டம் தொடர்பான பிரச்சனைகள்
2. இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வருவதற்குமுன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், பட்டயங்கள் அறிக்கைகள் தொடர்பான கருத்துக்கள்

- உச்சநீதிமன்றம் முதல்வகை பிரச்சனைக்கு, ஆலோசனை வழங்கலாம் (அ) வழங்காமலும் இருக்கலாம்.
- ஆனால் 2-ம் வகை பிரச்சனைக்கு, கட்டாயம் ஆலோசனை வழங்க வேண்டும்.

## ஆவண நீதிமன்ற அதிகாரம் - COURT OF RECORD

- **ART-129**-ன்படி உச்சநீதிமன்றம் ஆவண நீதிமன்றமாகவும், நீதிமன்ற அவமதிப்புகளை தண்டிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது.
- உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் (அ) ஆணைகளை இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் ஆவணமாக கருதி தீர்ப்பு வழங்க வேண்டும்.

## நீதிமன்ற மறு ஆய்வு (அ) நீதிப்புணராய்வு அதிகாரம்

- உச்சநீதிமன்றம் அரசியலமைப்பு சட்டத்தின் பாதுகாவலனாக செயல்படுவதால் மத்திய-மாநில அரசுகள் இயற்றும் சர்ச்சைக்குரிய (அ) அரசியலமைப்பிற்கு முரணானது செல்லாது என அறிவிக்கும் நீதிப்புணராய்வு அதிகாரத்தைப் பெற்றுள்ளது.அவை
- அரசியலமைப்பிற்கு முரணான சட்டங்கள்
- மத்திய-மாநில அரசுகளுக்கிடையே கூட்டாட்சி சமத்துவம் தொடர்பான சட்டங்கள் (அ) சிக்கல்கள்
- அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டங்கள்
- மேலும் ஐயப்பாடுகள் (ம) கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகும் அரசியலமைப்பு சட்ட அம்சங்களை ஆராய்கிறது.

## மற்றஅதிகாரங்கள்

- → **ART-71**-ன்படி குடியரசுத்தலைவர் (ம) துணைக்குடியரசுத்தலைவர் தேர்தல் தொடர்பான சிக்கல்கள் (அ) பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குகிறது (உச்சநீதிமன்றம்)

- வழக்குகளை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கோ (அ) ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொரு உயர்நீதிமன்றத்திற்கோ மாற்ற அதிகாரம் பெற்றுள்ளது.
- UPSC & SPSC தலைவர் உறுப்பினர்களை தான் விசாரித்து அளிக்கும் விரைவு அறிக்கை (அ) விசாரனண அறிக்கையின்படி பதவிநீக்கம் செய்ய பரிந்துரைக்கிறது.

நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்கள் (ம) தீர்ப்பாயங்களின் பணிகளை (ராணுவத்தீர்ப்பாயம் தவிர) மேற்பார்வையிட்டு கண்கானிக்கிறது

## உயர்நீதிமன்றம் [HIGH COURT]

- மாநில நீதித்துறையின் உச்சநிலை அமைப்பாக கருதப்படுகிறது.
- **சரத்து : 214** மாநிலத்திலும் உயர்நீதி மன்றம் அமைய வழி செய்கிறது.
- **சரத்து : 231** 2 (அ) அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவாக உயர்நீதிமன்றம் ஏற்படுத்துவது பற்றி குறிப்பிடுகிறது.
- 2 (அ) அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவான உயர்நீதிமன்றங்கள்

1. மும்பை
2. பஞ்சாப் , ஹறியானா
3. கௌஹாத்தி
4. ஆந்திரா, தெலுங்கானா.

- இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு பொதுவாக உள்ள உயர்நீதிமன்றங்கள்

1. மும்பை
2. பஞ்சாப் , ஹறியானா
3. கௌஹாத்தி
4. மெட்ராஸ்

5. கொல்கத்தா

6. கேரளா

7. ஆந்திரா, தெலுங்கானா.

- தனி உயர்நீதிமன்றத்தை பெற்றுள்ள யூனியன் பிரதேசம் - டெல்லி
- தற்போது இந்தியாவில் 24 உயர்நீதிமன்றங்கள் உள்ளது.
- சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளை 24.07.2004-ல் ஏற்படுத்தப்பட்டது.

**சரத்து : 217**

- உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் (ம) கட்டுபாடுகள் பற்றி குறிப்பிடுகிறது.
- உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி (ம) மற்ற நீதிபதிகளை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியையும் (கொலிஜியம்) அம்மாநில ஆளுநரையும் கலந்தாலோசித்த பின் குடியரசுத்தலைவர் நியமிப்பார்.
- பொதுவாக உயர்நீதி மன்ற மூத்த நீதிபதி (அ) உச்சநீதிமன்ற நீதிபதி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்படுவார்.
- உயர் நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கையை தீர்மானிப்பவர் குடியரசு தலைவர். (உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கையை தீர்மானிப்பது நாடாளுமன்றம்)

**நீதிபதிகளுக்கான தகுதிகள் :**

- நீதிமன்ற அலுவலக தலைமைப் பொறுப்பில் 10 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். (அ) 10 ஆண்டுகள் உயர்நீதிமன்ற வழக்கறிஞராக பணியாற்றி இருக்க வேண்டும்.
- **பதவிகாலம் :**
  - 62 வயது வரை.
  - 1963, 15-வது சட்டதிருத்தத்தின் படி உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது 60-62 ஆக உயர்த்தப்பட்டது.
  - உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது 62-65 ஆக உயர்த்தும் 104-வது சட்டதிருத்த மசோதா பாராளுமன்றத்தில் நிலுவையில் உள்ளது.
  - நீதிபதிகள் பதிவி விலகல் கடிதத்தை குடியரசு தலைவரிடம் வழங்க வேண்டும்.

**சரத்து** : 219

- உயர்நீதிமன்ற நீதிபதிகள் பதவிப் பிரமாணம் பற்றி குறிப்பிடுகிறது

.

பதவிப் பிரமாணம் செய்து வைப்பவர் ஆளுநர் (அ) அவரால் நியமிக்கப்பட்ட நபர்.

- **நீதிபதிகள் பதவி நீக்கம்**
    - உயர் நீதிமன்ற நீதிபதிகளை தவறான நடத்தை (அ) தகுதியின்மை ஆகிய காரணங்களுக்கான நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் 2/3 பங்கு சிறப்பு பெரும்பான்மை மூலம் குடியரசு தலைவர் பதவிநீக்கம் செய்வார்.
    - நீதிபதிகள் விசாரணை சட்டம் 1968.ல் இயற்றப்பட்டது.

**சரத்து** : 221

நீதிபதிகளின் சம்பளம் (ம) படிகள் பற்றி குறிப்பிடுகிறது.

**சரத்து** : 222

- நீதிபதிகளை ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொரு உயர்நீதிமன்றத்திற்கு மாற்றுவது பற்றி குறிப்பிடுகிறது.
- தலைமை நீதிபதியை கலந்தாலோசித்த பின் குடியரசு தலைவர் நீதிபதிகளை பணிமாற்றம் செய்வார்.

**சரத்து** : 223

- உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பதவி காலியாக இருக்கும் போது குடியரசு தலைவர் மூத்தநீதிபதி ஒருவரை தற்காலிக தலைமை நீதிபதியாக (Acting Chief Justice) நியமிப்பது பற்றி குறிப்பிடுகிறது.

**சரத்து : 224**

- உயர்நீதிமன்றத்தில் கூடுதல் பணி (ம) வழக்குகளை சமாளிக்க குடியரசு தலைவர் கூடுதல் (ம) [Additional & Acting Judges] தற்காலிக நீதிபதிகள் நியமிப்பது பற்றி குறிப்பிடுகிறது.

➤ **சரத்து : 224(A)**

- ஓய்வு பெற்ற நீதிபதிகளை 2 ஆண்டிற்கு மிகாமல் தற்காலிக நீதிபதிகளாக நியமிப்பது பற்றி குறிப்பிடுகிறது.

**சரத்து : 225**

- உயர்நீதிமன்றம் பொது நீதி வரையறையை பெற்றுள்ளது (Jurisdiction of Existing High Court) எனக் குறிப்பிடுகிறது.

**சரத்து : 228**

- உயர்நீதிமன்றம் வழக்குகளை தானே பதிந்து விசாரிக்கும் அதிகாரம் (Transfer of certain cases to High Courts) பெற்றுள்ளது எனக் குறிப்பிடுகிறது.

**சரத்து : 230**

- யூனியன் பிரதேசங்களுக்கு உயர்நீதிமன்றத்தின் நீதி அதிகாரத்தை நீட்டித்தல் (Extension of Jurisdiction of High Courts to Union Territories) பற்றி குறிப்பிடுகிறது.

## உயர்நீதி மன்றத்தின் அதிகாரங்கள்

### 1.முதல் வரம்பு நீதி அதிகாரம் (Original Jurisdiction)

➤ நிர்வாகம், திருமணம், மணவிலக்கு, கம்பெனிசட்டம், நீதிமன்ற அவமதிப்பு ஆகிய வழக்குகளை விசாரிக்கிறது.

➤ சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தல் வழக்குகளை விசாரிக்கிறது.

- வருவாய் வசூலிப்பு தொடர்பான வழக்குகளை விசாரிக்கிறது.

### 2.நீதிப் பேராணை நீதி அதிகாரம் [Writ Jurisdiction]

**சரத்து : 226**

- அடிப்படை உரிமைகளுக்கு தீர்வு வழங்க 5 நீதிப்பேராணைகளை பெற்றுள்ளது.
- உச்சநீதிமன்றம் நீதிப்பேராணை அதிகாரத்தை விட அதிக அதிகாரம் பெற்றுள்ளது.

### 3.மேல்முறையீட்டு நீதி அதிகாரம் ( Appellate Jurisdiction)

- அடிப்படை மேல்முறையீட்டு நீதி மன்றமாக செயல்படுகிறது.
- சார்நிலை (அ) துணை நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட சிவில் (ம) குற்றவியல் வழக்கு தீர்ப்புகளின் மேல்முறையீடுகளை விசாரிக்கிறது.
- குற்றவியல் வழக்குகளை பொறுத்தவரை கீழ் நீதிமன்றங்களுக்கு எதிராகவும் தீர்ப்பு வழங்கலாம்.

### 4.ஆலோசனை நீதி அதிகாரம் (அ) கண்காணிப்பு நீதி அதிகாரம் (supervisory jurisdiction)

**சரத்து : 227** கண்காணிப்பு நீதி அதிகாரம் பற்றி குறிப்பிடுகிறது.

- மாநிலத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்கள் (ம) தீர்ப்பாயங்களை (இராணுவதீர்ப்பாயம் தவிர) கண்காணிக்கிறது.
- அம்மாநிலத்திலுள்ள தீர்ப்பாயங்கள் (ம) நீதிமன்றங்களுக்கு ஒழுங்கு விதிகள், பொது விதிகள், செயல்முறை ஆணைகள் ஆகியவற்றை வெளியிடுகிறது.
- நீதி வழங்குதல் (ம) நிர்வாக பணிகளை மேற்கொள்கிறது.

### 5.சார்நிலை (அ) துணைநீதிமன்றங்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் (Control Over Subordinate Co

**சரத்து : 235**

ன் படி இவ்வதிகாரத்தை பெற்றுள்ளது.

- மாவட்ட நீதிபதிகள், நியமனம், மாவட்ட நீதிபதி அல்லாத மாநில நீதித்துறை அலுவலர்கள் நியமனம் ஆகியவற்றில் ஆளுநருக்கு ஆலோசனை வழங்கிறது.
- இவர்களின் பதவி உயர்வு, விடுப்பு வழங்குதல், பணிமாற்றம் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

- வழக்குளை ஒரு சார்பு நீதிமன்றத்திலிருந்து மற்றொரு சார்பு நீதிமன்றத்திற்கு வழக்குகளை மாற்றம் செய்யும் அதிகாரம், பெற்றுள்ளது.

### 6.ஆவண நீதிமன்ற அதிகாரம் (Court of Record)

**சரத்து** : 215 ன்படி இவ்வதிகாரத்தை பெற்றுள்ளது

- உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள், செயல்முறை ஆணைகள், மற்ற நடவடிக்கைகள் இவையனைத்தையும் மாநிலத்தில் உள்ள மற்ற நீதிமன்றங்கள் ஆவணமாக கருதி தீர்ப்பு வழங்க வேண்டும்.
- நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் (Contempt of Court Act) 1971-ன்படி நீதிமன்ற அவமதிப்புகளை தண்டிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது.

### 7.நீதிமன்ற மறு ஆய்வு (அ) நீதிப் புனராய்வு அதிகாரம் ( Power of Judicial Review)

**சரத்து** : 13 (ம) 226 ன்படி நீதிப் புனராய்வு அதிகாரத்தை பெற்றுள்ளது

- அரசியலமைப்பிற்கு முரணாக உள்ள மாநில அரசின் சட்டங்கள் (ம) விதிகளை அரசியலமைப்பிற்கு முரணானது (அ) செல்லாது என அறிவிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது.

### சார்நிலை (அ) துணை நீதிமன்றங்கள் [ Subordinate Courts] [Art-237]

- உயர்நீதி மன்றத்திற்கு கீழ் பல்வேறு நிலைகளில் செயல்படும் நீதிமன்றங்கள் சார்நிலை (அ) துணை நீதிமன்றங்கள்.
- துணை நீதிமன்றங்களின் அமைவிடம் மாவட்ட தலைநகரங்கள் (அ) அதற்கு கீழ் இடம் பெற்றிருக்கும்.
- துணை நீதிமன்றங்களின் நீதிபதிகள் பணி அமர்த்தம், பதவி உயர்வு விடுப்பு வழங்குதல் இவற்றில் உயர்நீதிமன்றம் அதிகாரம் செலுத்தும்.
- சார்நிலை (அ) துணை நீதிமன்றங்கள் 2 வகைப்படும்.

1. **குற்றவியல் நீதிமன்றங்கள்**

- மாவட்ட அளவில் குற்றவியல் நீதிமன்றம் மாவட்ட அமர்வு நீதிமன்றம் என அழைக்கப்படும்.‘

➢ மாவட்ட அமர்வு நீதி மன்றத்தில் அமர்வு நீதிபதி (ம) கூடுதல் அமர்வு நீதிபதி இருப்பர்.

**2. உரிமையியல் (அ) சிவில் நீதிமன்றங்கள்:**

➢ மாவட்ட அளவில் உரிமையியல் வழக்குகளை விசாரிப்பது மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.

➢ இந்நீதி மன்றத்தில் மாவட்ட நீதிபதி (அ) கூடுதல் மாவட்ட நீதிபதி இருப்பர்.

➢ 1989 ல் நாடு முழுவதும் துணை நீதித்துறையில் ஒரே மாதிரியான பதவி நிலையில் பணியமர்த்த வேண்டும் என உச்சநிதிமன்றம் ஆணையிட்டது.

**சரத்து : 233**

- மாவட்ட நீதிபதிகள் நியமனம் (Appoinment of District Judges)

- மாவட்ட நீதிபதிகளை உயர்நீதி மன்றத்தை கலந்தாலோசித்து ஆளுநர் நியமிப்பார்.

**சரத்து : 234**

➢ மாவட்ட நீதிபதிகள் அல்லாத மாநில நீதித்துறை அலுவலர்கள் நியமனம் பற்றி குறிப்பிடுகிறது.

➢ மாநில நீதித்துறை அலுவலர்களை மாநில அரசுப்பணியாளர் தேர்வாணையம் (spsc), உயர்நீதிமன்றம் ஆகியவற்றை கலந்தாலோசித்து ஆளுநர் நியமிப்பார்.

மாவட்ட நீதிபதிக்கான தகுதிகள்

➢ மத்திய (அ) மாநில அரசுப் பணியில் இருக்க (அ) இருக்கக் கூடாது.

➢ வழக்கறிஞராக (அ) அரசு வழக்கறிஞராக 7 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். அந்நபரை உயர்நீதிமன்றம் பரிந்துரைக்க வேண்டும்.

**சரத்து : 238**

➢ 1956, 7-வது சட்டதிருத்தின்படி Part-VII (Art-238) நீக்கப்பட்டது.

## யூனியன் பிரதேசங்கள் (Union Territories)

- 1956, 7-வது சட்டதிருத்தம் (ம) 1956 மாநில மறுசீரமைப்புச் சட்டம் ஆகியவற்றின் படி "Part-C மாநிலங்கள் (ம) Part-D மாநிலங்கள்" யூனியன் பிரதேசங்களாக மாற்றப்பட்டன.
- யூனியன் பிரதேசங்கள் 4 காரணங்களுக்காக ஏற்படுத்தப்பட்டன.
    1. அரசியல் (ம) நிர்வாக காரணங்கள் (Political and Administrative Consideration) - டெல்லி சண்டிகர்.
    2. கலாச்சாரம் (ம) தனித்தன்மை (Cultural Distinctiveness)- புதுச்சேரி, தாத்ராநாகர்ஹவேலி, கோவா, டாமன்டையூ.
    3. புள்ளியல் முக்கியத்துவம் ( Strategic Importance) - அந்தமான் நிக்கோபர் இலட்சத்தீவுகள்.
    4. பிற்படுத்தப்பட்ட (ம) பழங்குடியினர் மீது சிறப்பு கவனம் செலுத்துவதற்கான ( Special treatment and Care of the Backward and Tribal people) - மிசோரம், மணிப்பூர், திரிபுரா, அருணாச்சல பிரதேசம், இமாச்சல பிரதேசம்.
- யூனியன் பிரதேசங்கள் அனைத்தும் குடியரசு தலைவரால் நியமிக்கப்பட்டவர்களால் நிர்வகிக்கப்படுகிறது.
- யூனியன் பிரதேச நிர்வாகிகள் குடியரசு தலைவரின் முகவராக செயல்படுகின்றனர், ஆனால் மாநில ஆளுநரைப் போல மாநில அரசின் தலைவராக ( Head of the State) செயல்படுவதில்லை.
- டெல்லி நிர்வகிப்பவர்கள் - துணை நிலை ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள் குழு (Lieutenant Governor, Chief Ministers, Council of Ministers)
- பாண்டிச்சேரியை நிர்வகிப்பவர்கள் - துணைநிலை ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள் குழு (Lieutenant Governor, Chief Ministers, Council of Ministers)
- சண்டிகர் நிர்வகிப்பவர்கள் - ஆட்சியர் (அ) நிர்வாகி (Administrator)
- தாத்ராநாகர் ஹவேலி நிர்வகிப்பவர்கள் - ஆட்சியர் (அ) நிர்வாகி (Administrator)
- டாமன் டையூ நிர்வகிப்பவர்கள் - ஆட்சியர் (அ) நிர்வாகி (Administrator)
- இலட்சத்தீவு நிர்வகிப்பவர்கள் - ஆட்சியர் (அ) நிர்வாகி (Administrator)
- அந்தமான் நிக்கோபர் நிர்வகிப்பவர்கள் - துணை நிலை ஆளுநர் (Lieutenant Governor)
- பஞ்சாப் ஆளுநரே சண்டிகருக்கும் ஆட்சியராக செயல்படுவார்.
- தாத்ரா நாகர் ஹவேலியின் ஆட்சியர், டாமன் டையூவிற்கும் ஆட்சியராக செயல்படுவார்.

**சரத்து : 239**

- யூனியன் பிரதேசங்களை நிர்வகித்தல் (Administration of Union Territories) பற்றி குறிப்பிடுகிறது.

- குடியரசு தலைவர் யூனியன் பிரதேசத்தை நிர்வாகம் செய்வது பற்றி குறிப்பிடுகிறது. குடியரசு தலைவர் நியமிக்கும் ஆட்சியர் (அ) துணை நிலை ஆளுநர் மூலம் நிர்வாகம் செய்கிறார். (Creation of Logal Legislaataures or Council of Ministers of both for Certain Union Territories)

**சரத்து : 239AA**

- டெல்லிக்கு சிறப்பு அந்தஸ்து ( Special Provision with respect to Delhi) வழங்குவது பற்றி குறிப்பிடுகிறது.

**சரத்து : 239 (AB)**

- யூனியன் பிரதேசங்களில் அரசியலமைப்பு செயலிழக்கும் போது மாநில நெருக்கடி (அ) குடியரசு தலைவர் ஆட்சியை குடியரசுதலைவர் அறிவிப்பார்.(Provision in case of failure of Constitutional Machinery).

**சரத்து : 239 (B)**

- யூனியன் பிரதேசங்களில் நிர்வாகிகள் அவசர சட்டம் பிறப்பித்தல் பற்றி கூறுகிறது. (Power of Administrator to Promulage ordinances during recess of Legislature).

**சரத்து : 240**

- யூனியன் பிரதேசங்களை குடியரசு தலைவர் ஒழுங்குபடுத்துதல், ஒழுங்குமுறை விதிகளை அறிவித்தல் பற்றி குறிப்பிடுகிறது. (Power of President to make regulations for certain Union Territories).

**சரத்து : 241**

- யூனியன் பிரதேசங்களில் உயர்நீதிமன்றம் ஏற்படுத்துவது (High Courts for Union Territories) பற்றி குறிப்பிடுகிறது.